3. அறிவிப்புகள்.

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 9 (1) வது விதியின் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் நான்காவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Ch.i m..n) நியமிக்கிறேன் :—

1. திரு. மா. சின்னராசு.
2. டாக்டர் கே. சமரசம்
3. திரு. கே. குப்புசாமி
4. திரு. செ. செம்மலை
5. திரு. டி. ஆர். வேங்கடரமணன்.

4. தகவல் கோரல்.

)அ) கட்சியிலிருந்து நீக்கப்பெற்ற உறுப்பினர்கள் குறித்து

(சில உறுப்பினர்கள் எழுந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டரா? அமைச்சர் அவர்கள் படித்த அறிக்கையின் மீதா? (குறுக்கீடு) அவை நடவடிக்கைகள் பற்றி வருமேயானால் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பலாம். மற்றபடி முக்கியமானதாக இருந்தால் என்னுடைய அறையில் கேட்டு, அமைச்சரைக் கேட்டு எழுப்ப லாமென்று சொன்னேன் (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப் பினர் திரு. உத்திராபதி அவர்களிடம் காலையிலே சொன்னேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களைக் கேட்டுக்கொண்டு எழுப்புங்கள் என்று சொன்னேன். (குறுக்கீடு) எதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்கிறீர்கள் ?

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை நடவடிக்கை குறித்து என்றால் எழுப்பலாம்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, சில மாதங்களுக்கு முன்பாக எனது சக சட்டமன்ற உறுப்பினர்களான திரு. இரா. தாமரைக்கனி அவர்களும், திரு நெகமம் கந்தசாமி அவர்களும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டதாக......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பதில் சொல்லக் கூடிய விவரங்களை என்னுடைய அறைக்கு வந்து தெரிந்து கொள்ளுங்கள். (குறுக்கீடு) இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் எதுவும் இல்லை.